# நீங்கள் TTC பொதுப் போக்குவரத்தில் அல்லது Wheel-Trans இல் பயணிப்பவரா?



The Fair Pass Transit Discount என்ற தள்ளுபடித் திட்டம் மூலம் ஒரு பயணத்திற்கு $1.10 வரையும், மாதாந்த அனுமதி அட்டை ஒன்றிற்கு $32.75 வரையும் சேமிக்க முடியும்.



## Fair Pass discount தள்ளுபடியை யார் பெற்றுக்கொள்ள முடியும்?

பின்வரும் அனைத்தையும் பூர்த்திசெய்யும் குடியிருப்பாளர்கள்:

- ☑ டொரன்டோவில் வசிப்பவர்
- ☑ 20-64 வயதுடையவர்
- ☑ பின்வரும் திட்டங்களில் ஒன்றின் உதவியைப் பெறுபவர்:
  - ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works (OW))
  - ஊனமுற்றோருக்கான ஒன்ராறியோ உதவித் திட்டம் (Ontario Disability Support Program - ODSP)
  - டொரன்டோ சிறுவர்களுக்கான சேவைகள் வழங்கும் சிறுவர் பராமரிப்பு கட்டண மானியம்
  - வருமானத்திற்கு ஏற்றவாறான மானிய வாடகை (Rent-Geared-to-Income Subsidy - RGI)



## இதற்கு விண்ணப்பிப்பதற்கு உங்களுக்குத் தேவைப்படுவது என்ன?

1. உங்களின் பிறெஸ்ற்ரோ (PRESTO) அட்டை இலக்கம்
2. திட்ட உதவிக்கான உங்கள் ஆதாரம்:
   - OW, ODSP, சிறுவர் பராமரிப்பு கட்டண மானியம் அல்லது
   - குடியிருப்பு வழங்குபவரிடமிருந்து RGI முடிவுக் கடிதத்திற்கான அறிவிப்பு (RGI Notice of Decision letter) (அல்லது அதற்கு ஒத்தது)

## இப்பொழுது விண்ணப்பிக்கவும்: toronto.ca/transitdiscount

உதவியைப் பெற, **விண்ணப்ப மற்றும் உதவி மையத்தை** அழைக்கவும் – **416-338-8888**.



## நாங்கள் உங்கள் மொழியில் பேசுகிறோம்!

மொழி பெயர்ப்பு (இணையம்) மற்றும் விளக்க சேவைகள் (தொலைபேசி) ஆகியன கிடைக்கின்றன.



## PRESTO அட்டை இல்லையா?

தெரிவுசெய்யப்பட்ட டொரன்டோ நூலகக் கிளைகளில் இலவசமாக ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களைத் தெரிந்துகொள்ள: **torontopubliclibrary.ca/presto**

TORONTO | TTC